**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத் துறை**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம் - ஆடுதுறை**

**திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(10.09.2024 முதல் 14.09.2025)**

**அறிக்கை எண் 46/2025** **தேதி. 09.09.2025**

## திருவாரூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

தஞ்சாவூர் மாவட்டத்தின் **04.09.2025** முதல் **08.09.2025** வரையிலும் பகல் நேரவெப்பநிலை **34 - 37** °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை **26 - 29** °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 81 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் **80** சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு **4 - 5** கி.மீ வேகத்தில், பெரும்பாலும் மேற்கு தென் மேற்கு திசை வரை பதிவானது.

## எதிர்பார்க்கப்படும் வானிலை திருவாரூர் (10.09.2025 முதல் 14.09.2025)

| கடந்த வார வானிலை 04.09.2025 மற்றும் 08.09.2025) | | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 14.09.2025- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 04/09 | நாள்-2 05/09 | நாள்-3 06/09 | நாள்-4 07/09 | நாள்-5 08/09 | தேதி | நாள்-1 10/09 | நாள்-2 11/09 | நாள்-3 12/09 | நாள்-4 13/09 | நாள்-5 14/09 |
| 0.0 | 0.0 | 0.1 | 0.0 | 8.3 | மழை (மி.மீ) | 1 | 2 | 1 | 1 | 0 |
| 34 | 35 | 37 | 37 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 37 | 37 | 36 | 36 | 37 |
| 28 | 28 | 29 | 29 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 27 | 27 | 26 | 27 | 27 |
| 5 | 6 | 5 | 5 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 5 | 8 | 8 | 8 |
| 78 | 78 | 77 | 70 | 81 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 70 | 80 | 70 |
| 72 | 67 | 70 | 70 | 80 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 40 | 40 |
| 5 | 4 | 4 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 20 | 20 | 14 | 16 | 20 |
| மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | காற்றுவீசும் திசை | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு |

## திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். **10.09.2025** முதல் **13.09.2025** ஆகிய தினங்களுக்கு லேசான தூரல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை **36 - 37** °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை **26 - 27** °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் **80** சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் **50** சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு **14 - 20** கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| நெல் | நடவு வயல் | தற்போது நிலவும் வானிலையை பயன்படுத்தி நெல் பயிரிட வயல்களை உழவு செய்து தயார் செய்யவும் |
| | | நெல் நடவு செய்ய நிலத்தை தயார் செய்யும் போது ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் இடவும். |
| | | நடவு செய்யும் விவசாயிகள் 1 ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம் 10 கிலோ ஜிங்சல்பேட் 15 கிலோ யூரியா 40 கிலோ டிஏபி மற்றும் 10 கிலோ பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இடவேண்டும். |
| | | மழைகாலம் நூற்புழு தாக்குதலுக்கு உகந்தது என்பதால், நெல் நடவிற்கு முன் ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம்புண்ணாக்கு இட்டு பூச்சி மற்றும் நூற்புழுக்களை கட்டுப்படுத்தலாம். |
| | கரு நாவாய் பூச்சி | தற்போது நிலவும் வானிலையால் நெல் பயரில் கரு நாவாய் பூச்சி தாக்கம் தென்படுகிறது, இதனை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு அசிபேட் 75 SP 40 கிராம் அல்லது தையாமீத்தாக்சைம் 25 WG 40 கிராம் என்ற அளவில் பயன்படுத்தவும். |
| | தண்டு துளைப்பான் | தற்போது நிலவும் வானிலையால் நெல் பயரில் தண்டு துளைப்பான் தாக்கம் தென்படுகிறது, இதனை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு குளோரான்ட்ரானிலிப்ரோல் 18.5 SC 600 மில்லி அல்லது குளோர்பைரிபாஸ் 20 EC @ 500 மில்லி என்ற அளவில் பயன்படுத்தவும். |
| கால்நடைகளுக்கு | பசு | காற்றின் வெப்பநிலை 35 டிகிரி செல்சியசுக்கு மேல் அதிகரிக்கும் போது கறைவை மாடுகளின் தண்ணீர் குடிக்கும் அளவு அதிகமாவதோடு உலர் பொருள் உட்கொள்ளும் அளவு குறையும். இதனால் பால் உற்பத்தி குறைய தொடங்கும். ஏனவே பசுந்தீவனத்துடன் புரதசத்துள்ள பசுந்தீவனங்களை கொடுக்க வேண்டும். |

## குறுஞ்செய்தி

உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் பரிந்துரைக்கப்படும் வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறார்கள் (TNAU AAS, Meghdoot and DAMINI).

**இயக்குநர்**